ருசியாகவும் சுத்தமாகவும் தயாரிக்கப்படும்
பாண் வகைகள்
பணிஸ் வகைகள்
கேக் வகைகள்
**GARLIC BREAD**
உங்களுக்குத் தெரியுமா?
பாணுக்குள் சீனிச் சம்பல்
பாணுக்குள் பல வகைகள்
விரைந்து வாருங்கள் விரும்பியதை
வாங்குங்கள்

INTERNATIONAL BAKERY
3160 Eglinton Avenue E #4
Scarborough, Ont. M1J 2H4
(Markam & Eglinton)

## Tel.: (416) 269-4217

# AUTO MASTER

## FOR EXCELLENT AUTO REPAIR

Air Conditioning, Tune up, Exhaust
ELECTRICAL & MECHANICAL REPAIRS
ON IMPORTED & DOMESTIC VEHICLE
SPECIALIZED IN BREAKS
SUSPENSION ETC.

சகலவிதமான வாகன திருத்த வேலைகளுக்கும் தரமான
நம்பிக்கையான நிறுவனம். குறைந்த கட்டணத்தில்
தரமான சேவை.
மக்கள் அபிமானத்தைப் பெற்ற நிறுவனம்.

1940 Ellesmere Road, Unit 3
Scarborough
Ontario M1A 2V7

## Tel.: (416) 438 3867



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதித் தேவைகள் அனைத்திற்கும்

## தொடர்பு கொள்ளவும்

# ராம் நாகலிங்கம்



# Ram Nagalingam

345 Drift wood Avenue # 812
North york, Ont.
M3N 2P4

**Tel.: (416) 665- 3609**

NORWICH UNION உங்களுக்கு நிதித் துறையிலும் காப்புறுதித் துறையிலும் சிறப்பான சேவையை வழங்குகின்றது. உங்கள் எதிர்காலத் தேவைகளுக்கு உறுதுணையாக உதவி புரிய நீங்கள் நாடவேண்டிய நிறுவனம்

**NORWICH UNION**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளுக்கு இயல்புரை காண்பது எப்படி?

*முனைவர் இரா. சாரங்கபாணி*
*330. மாரியப்பா நகர்*
*அண்ணாமலை நகர்*

திருக்குறளைக் கற்ற அறிஞர்கள் தாம் கண்ட உரைப் புதுமைகளை மக்கள் மன்றத்திடையே பரப்பக் கருதிப் பல நூல்கள் எழுதலாயினர். அதன்பயனாகத் திருக்குறளுக்கு எளிய உரை, தெளிவுரை, மரபுரை, இயல்புரை, பொழிப்புரை, விளக்கஉரை, மணிவிளக்க உரை, எனப் பலவகை உரை நூல்கள் எழுந்தன. உரைகளின் தொகுப்பாக உரைவளம், உரைக்கொத்து, உரைவேற்றுமை, உரைக்களஞ்சியம் என்றாங்குச் சில நூல்கள் வெளிவந்தன. இவற்றை நோக்கின். சில குறளுக்கு வேறுபட்ட உரைகள் இருப்பதறியலாம். ஒரு குறளுக்குப் பல உரை எழுவானேன் என எண்ணிப் பார்த்தால், சில காரணங்கள் புலப்படும். அவற்றுள் தலையாயவையாகப் பாட வேறுபாடு, சொற்பிரிப்பு, கொண்டு கூட்டு, கால மரபு கருதாமை, கொள்கைத் திணிப்பு, இலக்கணப் புறக்கணிப்பு முதலியவற்றைக் கூறலாம்.

ஆகவே, உரை எழுதுவோர், குறளைப் பன்முறை ஓதியுணர்ந்து, நூலின் அடிப்படைக் கொள்கைக்கு முரணாகாமல் உரை காணவேண்டும். குறள்காலச் சொல்லாட்சியையும் குறளின் நடைப்போக்கையும் ஆழ்ந்து நோக்கவேண்டும். குறளுக்குக் குறளைக் கொண்டே உரை கூறுதலும் விளக்கம் தருதலும் உரையறமாகும்.

அறத்திற்கு இலக்கணம் கூறும்போது, 'அறமாவது மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம்' எனப் பரிமேலழகர் உரைப் பாயிரத்தில் கூறுவது பொருந்தாது. 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்' (34) 'அழுக்காறு, அவா. வெகுளி. இன்னாச் சொல் நான்கும் இழுக்கா இயன்ற தறம்' (35) என்னும் குறள் அடிப்படையில் அறத்திற்கு இலக்கணம் கூறுவது ஏற்புடையது. அறன் வலியுறுத்தல் அதிகாரத்தில் இறுதி இரண்டு குறள்களுக்கு மனக்குடவர் தரும் விளக்கம் அறத்தின் இலக்கணம் கூறுவதாக உள்ளது.

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்  (412)

'சிறிது ஈயப்படும்' என்பதற்குப் பரிமேலழகர் குறள் வழிநின்று விளக்கந்தருவர். 'பெரிதாய வழித் தேடல் துன்பமேயன்றி, நோயும் காமமும் பெருகுதலாற் 'சிறிது' என்றார் என அவர் கூறுவது நல்ல விளக்கமாகும். 'கழிபேரிரையான்கள் நோய் நிற்கும்' எனக் குறள் கூறுதல் காண்க.

வாராக்காய் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்  (1179)

இக்குறளுக்குப் பரிதியார், 'நாயகர் வாராக்காலும் நித்திரையில்லை: வந்தாலும் கயவியினால் நித்திரையில்லை என்று உரை செய்வர். ஆனால் மணக்குடவர் 'வாராத காலத்துப் புணர்ச்சி வேட்கையால் துஞ்சா. வந்த காலத்துப் பிரிவார் என்று அஞ்சித்துஞ்சா: அவ்விரண்டிடத்தும் மிக்க துன்ப முற்றன கண் என்று உரை காண்பர். இவ்வுரை ' பெறா சுமை அஞ்சும் பெறழுறட பிரிவஞ்சும், ஆறாஅ இடும்பைத் தென் நெஞ்சு ' (1295) என்ற குறள் அடிப்படையில் எழுந்ததால் சிறப்பாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும்
உகாசுமை வல்லதே ஒன்று (585)

இக்குறளில் வரும் 'கடா அஉரு' என்பதற்கு, ஐயுறாத வடிவு என்று பொருள். அதனை விளக்கபரிமேலழகர், "ஐயுறாத வடிவான - பார்ப்பார், வணிகர் முதயாயினார் வடிவு' என்று சாதியடிப்படையில் உரை வகுப்பர். ஆனால் அடுத்த குறளிலே "துறந்தார் படிவத்தராகி ' (586) என்று குறிப்புள்ளது. பரிமேலழகர் ஐயுறாத வடிவுக்குத் துறவியைக் குறிப்பிடவில்லை. காளியங்கர் அதற்கு' 'அறவோர் வேடமும் துறவோர் வேடமும் வறியோர் வேடமும் பிறவுமாகிய நல்லுருவு கொண்டு ' என எழுதியிருத்தல் குறளடிப்படையில் எழுந்த நல்லுரையாகும்.

குறளின் போக்கறிந்து இங்ஙனம் உரை எழுதியது போலவே, சில குறளுக்கு உவமைக் குறிப்பை நன்குணர்ந்து பொருள் விளக்கம் செய்துள்ளனர்.

அழுக்கா றுடையான்கள் ஆக்கம்போன் றில்லை
எழுக்க மிலான்கள் உயர்வு (135)

இக்குறளுக்குப் பரிமேலழகர் விளக்கம் வரையும் போது. 'உவமையான் ஒழுக்க மில்லாதவன் சுற்றத்திற்கும் உயர்ச்சியில்லை என்பது பெற்றாம். என்னை? 'கொடுப்பதமுக்கறுப்பான் சுற்றமும் நல்கூர்தலின்' என எழுதியுள்ளனர். 'கொமுப்பதமுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக்கெடும்' (166) என்னும் குறளை நினைந்தெழுதிய சிறப்புரை ஏற்கத்தகுவதே.

முதலிலார்க் கூதிய மில்லை, மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை (449)

இக்குறள் எடுத்துக்காட்டுவமை. முதற்பொருள் இல்லாதார்க்கு ஊதியம் இல்லாதது போலப் பெரியாரின் துணையில்லாதார்க்கு நிலை இல்லை என்பது பொருள். உவமைக் கருத்தின் குறிப்பறிந்து பரிப்பெருமாள் 'பெரியாரைத் துயைாகக் கொள்ளதார்க்கு வருங் குற்றங் கூறுகின்றார். ஆதலின், முற்படப் பொருட்கேடு உண்டாம்' என்று கூறினார். எனக் கூறியிருத்தல் நயமாக பகுதியாகும். பெரியாரின் துணையில்லார்க்குப் பொருளிழப்பு நேரும் என்பது உவமை கொண்டு உய்த்துணர்ந்தெழுதிய நற்கருத்து.

சொற்பிரிப்பு

குறளிலுள்ள புணர்மொழிகளைப் பிரிக்கும் போது பொருட் சிறப்புணர்ந்து ஆழ்ந்து நோக்கிப் பிரிக்கவேண்டும். குறளைப் பதிப்தித்தவர்களிற் சிலர் உண்மை பொருள் சிதையுமாறு சொற்களைப் பிரித்துள்ளனர். அதனால், குறள் தன் இயல்பாய பொருளை இழந்து விடுகிறது.

விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உண்ணின்று உடற்றும் பசி (13)

இக்குறளில் வரும் ' விண்ணின்று' என்பதனை விண் நின்று என்றும் விண் இன்று என்றும் பிரித்தும் 'உண்ணின்று' என்பதனை உன். இன்று என்றும் பிரித்தும் வெவ்வேறு பொருள் கூறுவர். 'உள். நின்று' எனப் பிரித்தே பதிப்பித்தால் 'நிலை நின்று' என்று பொருள் கூறவே இடமுண்டு. 'உண். இன்று ' என பிரிக்கவும் 'உணவு இல்லாமையில்' எனப் பொருள் கொள்ளவும் இடமில்லை. உண்-முதனிலைத் தொழிலாகு பெயர். உணவைக் குறிக்கும். ஆகவே மூலத்தைப் பிரிக்காமல் சேர்த்து போட்டால் தான் பொருளுக்கேற்பச் சொல்லைப் பிரித்து தேர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். ஒரு பொருளுக்கேற்பச் சொல்லைப் பிரிப்பதால் வேறொரு பொருளை இழக்க நேரிடுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Keele & Finch
சந்திப்பில்
Country Style
Donuts
பின்புறமாக

# Aruna Market

## EAST, WEST INDIAN & CANADIAN GROCERIES

தமிழ் மக்களுக்குத் தேவையான,
- உணவுப் பொருட்கள்,
- உடன் இறைச்சி,
- கடலுணவுப் பொருட்கள்,
- வீடியோ வாடகை,
- துரித பணமாற்றுச் சேவை

ஆகியனவற்றிற்கு என்றும் நாடுங்கள்




**3891 B Keele Street, Downsview**
**Tel.: (416) 636-0638**
**Fax : (416) 636-3912**

அருணா மார்க்கட்

# வாத நிவாரணி

# சபோனா
# SABONA

Tel.: (416) 269-2383
Fax.:(416) 269-8151

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை
பின்னூ றிரங்கி விடும். (535)

பின் அத்துன்பம் வந்துற்ற காலத்துக் காக்கலாகாமையின், அத்தவற்றினை நினைத்து இரங்குவான் என்று பரிமேலழகர் பொருள் கூறுவர். அவர் 'ஊறு' என்பதனை ஏழாம் உருபு தொக்கதாகக் கொண்டு 'ஊற்றின்கண்' என விரிப்பர். பின் நூறு இரங்கிவிடும் எனப் பிரித்து நூறு வகையால் இரங்கத்தகும் எனக் காளிங்கரும் ஒன்று நூறாகத் துன்பம் தந்து இரங்கிவிடும் எனப் பரிதியும் உரை வரைந்துள்ளனர். பத்தடுத்த தீமைத்தே (450) 'எழுபது கோடி யுறும்' (639) 'பத்தடுத்த கோடி யுறும் (817) என்று குறளாட்சிகள் 'பின் நூறு இரங்கிவிடும் ' எனப் பிரித்துக் கொள்ளும் பொருளுக்குத் துணை செய்கின்றன.

நாடொறும் நாடி முறைசெய்ய மன்னவ
நாடொறும் நாடு கெடும். (553)

நாள்தோறும் நாடு கெடும் எனப் பிரித்து, நாள்தோறும் நாடு இழக்கும் எனப் பொருள் கூறுவர் பரிமேலழகர். ஆள் தொறும் நாடு கெடும் எனப் பிரித்து, ஆளுந் தோறும் நாடு கெட்டுக் கொண்டேயிருக்கம் எனப்புதுவதாகப் பொருளுரைத்தவர் நாவலர் ச. சோமசுந்தர பாரதியாராவர்.

வழுத்தினாள் தும்மினே னாக, வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீர் என்று. (1317)

இக்குறிலிலுள்ள 'வழித்தழுதாள்' என்ற தொடரில் 'வழித்து' என்பதை இயல்பாகக் கொள்ளாமல் வசுரத்தை உடம்படுமையாகக் கொண்டு 'அழித்தழுதாள்' எனப் பிரித்துப் பரிமேலழகர் உள்ளிட்ட பலரும் உரை எழுதியுள்ளார்கள். 'அழித்து' என்பதற்கு மறுபடியும் என்று நீக்கி என்றும் பொருள் கண்டுள்ளனர். வழித்தழுதாள்' என மூலத்திலுள்ளபடி இயல்பாகக் கொண்டு வடிகின்ற கண்ணீரைத் துடைத்து (வழித்து) அழுதாள் எனப் பொருள் கோடலே இயல்பானது. அங்ஙனம் கொண்டால் வழுத்தினாள்......... வழித்தழுதாள்' என மோனை நயமும் உண்டு.

அறத்திற்கே அன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு ம தே துணை (76)

இக் குறளில் என்ப. அறியார் என்னும் இரு சொல்லும் புணரும்போரு வசுர உடம்படுமைய் பெற்று' என்ப வறியார்' என வந்துள்ளது. 'வறியார் என்பதில் வசுரத்தை உடம்படு மெய்யாகக் கருதாது 'வறியார்' என்பதே சொல்லாகக் கொண்டு வறியயவரது பாவச் செயலுக்கும் அன்பே காரணம் என்றும் பொருள் கூறியுள்ளனர். இவ்வுரை இயயல்பானதன்று. 'அறியார்' என்று பிரித்துக் கொள்வதே இயல்பான உரைகொள்ள ஏற்றதாகம். மேலும், 'அறத்திற்கே அன்பு சார் பென்ப அறியார்' என்று கொண்டால் மோனை நயமும் மிகும். சொற்களைப் பிரிக்கும் போது எங்ஙனம் பிரித்தால் பொருட் சிறப்பிருக்கும். யாப்பிணிமை தோன்றும் எனக் கருத்திற் கொண்டு பிரிக்கவேண்டும்.

பாடவேறுபாடு

பரிமேலழகர் கொண்ட குறள் மூலபாடமே எங்கும் வழக்கிற் காணப்பெறுகின்றது. அதனினும் சிறந்த பாடமிருப்பினும், அது வழக்கில் ஆட்சியில்லை.

திகந்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல். (256)

'கொல்லாது' எனப் பரிமேலழகர் கொண்ட பாடத்திலும் <u>கொள்ளாது</u> என மணக்குடவர் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரித பணமாற்றுச் சேவை

# BALA SELVAM

## SINCE 1987

**Tel.: (416) 264 4000**
**Fax: (416) 264 5596**

**3 LORD ROBERTS DRIVE**
**SCARBOROUGH, ONTARIO**
**M1K 3W1**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Singapore Jewellers

நம்பிக்கை • நாணயம் • உத்தரவாதம்

நியாயமான விலை

மாற்றுக்குன்றாத சிங்கப்பூர் தங்கம்

சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அசல் 22கரட் புதிய தங்க நகைகளை உடனுக்குடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் காலத்தின் மாற்றத்திற்கேற்ப பெற்றுக்கொள்ள புதிதாக நிறுவப்பட்டுள்ளது.

Singapore Jewellers

2387 Eglinton Ave., E. Unit #1 Scarborough, Ont.

Tel.:(416) 752-GOLD (4653)

**கிதவாணிக்கும் நல்லூர்குமரனுக்கும் அருகில்**

**ரெலி கனடாவினுள் அமைந்துள்ளது**



# NIRMALA PERSAUD

**Barrister, Solicitor and Notary Public**

**3077 Kingston Road**
**Tel.: (416) 269-2169**
**Fax: (416) 261-6490**

*Can't Come to the office?*
*I'll go to you.*

Reasonable fees.
Convenient payment plan.
Legal Aid Accepted

**Exprienced**
**Skilled**
**Aggressive**

WILLS & ESTATES
Wills / Codicils
Power of Attorney
Contested Wills &
Estate Litigation

CRIMINAL LAW
Assaults
Thefts
Young Offenders
Sexual Assaults

FAMILY LAW
Divorce
Child Custody
Support Payments




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜ் லங்கா கேற்றரோஸ் பல்சுவை உணவகம்

ஸ்காபுரோ நகரில் டண்போர்த் றோட் பிறிம்லி சந்திப்பில் யூனிற் 6 இல்

## *Taj Lanka Caterers & Takeout*

**Vegetarian or Non Vegetarian**

Try our delicious SriLankan Muslim Style Cusine by renowned chef Ansar for all your Catering and Take-out orders. We specialize in Buriyani, Ghee Rice, String Hopper Buriyani, Whole Fried Chicken, Palaandi, Kurma, Lamp rice, Yellow Rice and many more food favourites.

*Small or big functions catered for Full catering Service*

For details on Menus, Prices Please call:

**(416) 456-4450**

**Taj Lanka Caterers & Take-out**

1071 Danforth Road, Scarborough, Unit # 6 (Danforth Rd. & Brimley)

# Dr.K. VAITHIANATHAN. MBBS, CCFP

## Family Physician

## குடும்ப வைத்தியர்



**Special Interests in Management of Asthma, Diabetes, Mellitus and Male sexual dyfunction**

விசேடமாக
தொய்வு நோய் **(Asthma)**
சலரோகம் (சர்க்கரை வியாதி)
ஆண்மைக்குறைபாடு

2100 Ellesmere Road, Suite # 109
Scarborough, Ontario, M1H 3B7
(Markam & Ellesmere)

Tel.: (416) 438-2496
Fax: (416) 438-8290

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடமே தக்கது. பின்வரும் ஊண் தருவார் இல்' என்பதிலுள்ள 'தருதல்' என்னும் சொல்லுக்குக் கொள்ளாது என்னும் சொல்லே பொருட் பொருத்தமுற இயைதல் காணலாம்.

காலாழ் களரின் நரியடும் கண்ணஞ்சா
வேலான் முகத்த களிறு (500)

இக்குறளில் 'வேலான் முகத்த' என்பது பரிமேலழகர் பாடம். 'வேலாழ் முகத்த' என்பது காளிங்கர் பாடம் 'வேலான் முகத்த களிறு' என்பதற்கு வேலாட்களைக் கோத்த கோட்டவுமாய களிறுகள் எனப் பரிமேலழகர் உரை செய்வர். 'வேலாழ் முகத்த களிறு' எனக் கொண்ட பாடத்தை, 'வேற்படை குளித்த முத்த வாயின் அதுவும் நரியடுதற்கு ஏதுவாய் முடிதலின் அது பாடமன்மையறிக்' எனப் பரிமேலழகர் மறுப்பர். களிறு களரிபிடத்துக் காலாழும் பொழுது முகத்தில் வேலுடையதாகப் பரிமேலழகர் பொருள் கொள்வது போல் கொள்ளாது. வேலாழ் முகம் என்ற வினைத் தொகையை இறந்த கால வினைத் தொகையாகக் கொண்டு வேலாழ்ந்தமையில் வடுவுடைய முகம் எனக் காளிங்கர் பொருள் கொள்வது போல் கொள்ளின் பரிமேலழகர் மறுப்புக்கு இடமில்லை. மேலும், 'காலாழ்' என்னும் சொல்லுக்கு 'வேலாழ்' என்னும் அப்பாடம் எதுகை நயம் சிறக்க அமைகின்றது.

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணா செய்யாமை தலை. (317)

'மனத்தானாம்' பரிமேலழகர் பாடம். 'மனத்தானம்' மனக்குடவர் பாடம். 'மனத்தானும்' என்னும் பாடம் மொழியினும் மெய்யானம் மாணா செய்யாமை தலை என்னும் கருத்தைத் தருதலின். பொருள் நயமும் 'எனைத்தானம்' என்பதற்கேற்ப வருதலின் எதுகை நயமும் சிறந்து நிற்பதறியலாம்.

அறிகொன் றறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன் (638)

இதற்கு அறிந்து சொல்லியாரது அறிவையும் அழித்து அரசன் தானும் அறியானே யாயினும் அக்குற்றம் நோக்கி ஒழியாது அவனுக்கு உறுதியாயின கூறுதல் அமைச்சனுக்கு முறைமை என்று பரிமேலழகர் உரை வரைந்துள்ளார். பரிதி எல்லாம் அறிவுள்ள ராசா அறிகிற தறுவாயில் அறியாதபோது உறுதியாக மந்திரி சொல்லக் கடவன்' என உரை கூறியுள்ளார். இப்பொழுதுள்ள மூலத்துக்கும் 'எல்லாம் அறிவுள்ள ராசா' என்னும் பரிதி உரைக்கும் தொடர்பு இருப்பதாகத் தோன்றவில்லை. பரிதி கொண்ட மூலபாடம் வேறாக இருக்குமோ என என்ன தோன்றுகிறது. 'எல்லம் அறிவுள்ள ராசா' என்னும் உரைக்கு 'அறிகோன்' என்று பாடமிருக்கலாம். இப்பாடம் வேறு ஏட்டில் காண்படு மேல் ஏற்கத்தக்கதே.

கொண்டு கூட்டு முறை

சில குறளுக்குச் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டியுள்ளது. அங்ஙனம் கொள்ளுங்கால், சிலரது கொண்டு கூட்டு பொருத்தமாக உள்ளது. சிலரது கொண்டு கூட்டு குறளுக்குப் பொருத்தமுறத் தோன்றவில்லை.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி (137)

இக் குறளில் 'பழி என்னும் சொற்கு முன் வரும்' எய்தா' என்ற சொல்லை "மேன்மைக்கு முன் இயைத்து எய்தா மேன்மை எனக் கொண்டு ஒழுக்கத்தாலே தமக்கு எய்தாத மேம்பாட்டை எய்துவர் என மனக்குடவர் உரைப்பது ஏற்பதற் குரியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவுக மாசற்றார் கேண்மை ஒன்றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. (800)

ஒன்றீத்தும்' என்பதை சிங்க நோக்காகக் கொண்டு ஒன்று ஈத்தும் மருவுக மாசற்றார் கேண்மை எனப் பரிதி பொருள் காண்பர். 'குற்றமற்றார் நட்பு வேண்டினது கொடுத்தும் கட்டிக் கொள்க. பொல்லாதார் நட்புச் சில கொடுத்தும் கைவிடுக. என்பது பரிதி உரை. குடிப்பிறந்து தன்கட் பழி நாணுவானைக் கொடுத்துங் கொளல் வேண்டும் நட்பு ' (804) என வருதலின் பரிதி ' ஒன்றித்தும் மருவுக' என மூன்றும் கொண்டு கூட்டியது இயல்பேயாம்.

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். (166)

இக் குறளுக்குச் சிலர் நிரல் நிறைப் பொருள் காண்பர். அதன்படிக் கண்டால் 'அழுக்கறுப்பின் உடுப்பது இன்றிக் கெடுவான். அவன் சுற்றம் உண்பது இன்றிக் கெடும்' என்று பொருள்படும். இப்பொருள் சிறப்பில்லை. ஏனெனில் அழுக்களுப்பானுக்கு உண்பதும் அவன் சுற்றத்துக்கு உடுப்பதும் கிடைக்கும் எனவும் பொருள் கொள்ள வாய்ப்புண்டு ஆதலின் என்பது.

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அ தே துணை (26)

இக் குறளில் வரும் 'என்ப அறியார்' என்பதனை மறத்திற்கம் அஃதே துணை' என்ற தொடருக்குப் பின் கட்டி' மறத்திற்கும் அஃதே துணை என்ப அறியார் என இயைத்துப் பொருள் கூறுவர். இக் கொண்டு கூட்டும் கூறிய பொருளும் பொருத்தமாகப்படவில்லை. ஆகவே சிறப்பானஃ பொருந்துவதான பொருள்படுமாறு கொண்டு கூட்டுதலே ஏற்கத்தகுவதாகும்.

கால மரபு கருதுதல்.

'பொய்யெனப் பெய்யும் மழை' (55) என்பதற்குப் பெய்யென்னும் பருவ காலத்தே பெய்யும் மழையைப் போர்வாள் எனச் சிலர் பொருள் காண்பர். 'அருமழை தரல் வேண்டின் தருகிற்கும் பெருமையளே' (39.6) என்று கலித் தொகையும் 'வான் தரு கற்பின் மறையுரை மகளிர் ' (15.77) என்று மணிமேகலையும் கூறுவதால் கற்புடை மகளிர் பெய்யென்றால் மழை பெய்யும் என்ற சங்ககால நம்பிக்கையை குறள் கூறுவதாகக் கொள்வதில் இழுக்கில்லை.

'இன்னாது இரக்கப் படுதல்' (224) என்பதற்கு இரக்கம் காட்டுதல் நல்லதல்ல என்று நாமக்கல் கவிஞர் உரை காண்பர். 'செயப்பட்டார் சால்பின் வரைத்து' (105) என்பது போல. இரக்கப் படுதலைச் செயப்பாட்டு வினையாகக் கொள்ள வேண்டும். இரக்கப்படுதலை வருத்தப்படுதல் என்பது போலத் தன் வினையாகக் கொண்டு இரங்குதல் என்று பொருள் கூறுதல் பிற்கால வழக்காகும். இரக்கப்படுதல் என்று தன்வினைப் பொருள் கொள்ளின் அக்கால நடையில் இரங்குதல் என்றே வள்ளுவர் ஆட்சி செய்திருப்பர். ஆகவே குறளுரை செய்யக் கால மரபு இன்றியமையாதது எனக் கருதி அக்காலச் சொல் வழக்கு, நம்பிக்கை முதலியவற்றை மனங்கொள்ள வேண்டும்.

கொள்கைத் திணிப்பு

சமயச் சார்பு, கட்சிச் சார்பு முதலியவற்றை முன்னிறுத்தி உரை காண்பதால் குறளுக்கு இயல்புரை அமையவில்லை. 'நல்வினை மேற்சென்று செய்யப்படும்' (335) என்னும் குறளில் நல்வினை என்பதற்குச் சிவபெருமானை வணங்குதல் என்று சிலர் விளக்கம் அளித்துள்ளனர். அறனாக்கம் வேண்டாதான்' (163) என்விடத்து அரனாக்கம் என்றும் 'மாண்டார் நீராடி' (278) என்றவிடத்து நீறாடி என்றும் பாடவேறுபாடு கண்டு சமயப்பற்றைக் காட்டுவர். அரன் சிவன்: நீறு-திருநீறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தாப்பு 98 இற்கு எமது இனிய வாழ்த்துக்கள்

# ஸ்ரீ கௌரி மங்கள சேவை

அனைத்து இந்துமத கிரியைகளுக்கும். கனேடிய திருமணப் பதிவு அதிகாரி. இந்து மதகுரு.

## பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் (ஜயாமணி)

(புங்குடுதீவு - 10)

**(416) 266 3333**

அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்,
திருமணம், மற்றும் மங்களகரமான வைபவங்களுக்கும்
வேண்டிய எல்லாத் தேவைகளுக்கும்
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
இத்துடன் குறைந்த வாடகையில்
ஸ்காபுரோ, ரொறன்ரோ ஆகிய இடங்களில்
200 பேர் முதல் 600 பேர் வரை
இருக்கக்கூடிய
கார் தரிப்பு வசதியுடன் கூடிய
அழகான மண்டபங்கள்
பெற்றுக்கொள்ள
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**628 E Birchmount Road,**
**Scarborough, Ontario M1K 1P6**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும் (133)

இக்குறளுக்குப் பரிமேலழகர் 'எல்லார்க்குந் தத்தம் வருணத்திற்கேற்ற ஒழுக்க முடைமை கலுநுடைமையாம். அவ்வொழுக்கத்தின் தவறுதல் அவ்வருணத்தின் தாழ்ந்த வருணமாய் விடும் என்று சாதியடிப்படிடையில் உரை கூறியுள்ளார். 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே, அஃறிணை என்மனார் அவரலபிறவே' என்னும் தொல்காப்பிய அடிப்படையைக் கொண்டது. அக்குறள் ஆகவே 'இழிந்த பிறப்பாய் விடும் என்பதற்கு அஃறிணையாகிவிடும் என்று கூறுவதே இயல்பான உரையாகும். 'மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர் (997) 'தலையின் இழிந்த மயிரனையர் (964) முதலிய குறளாட்சி காண்க.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து (396)

இக்குறளுக்கு மறுபிறப்பில் நம்பிக்கை யில்லாதவர்கள் தம் கருத்தை ஏற்றி உரை கண்டுள்ளனர்

புலவர் குழந்தை 'ஒருவனுக்கு ஓரிடத்தில் தான் கள்ள கல்வியானது பலவிடங்களிலும் சென்று உதவுதலையுடையது. 'எழுமை' என்னும் பெயர் பல என்னும் பொருளது. ஒருவன் ஓரிடத்திலிருந்து கற்கிறான். அவனால் செய்யப்பட்ட நூற்கள் பல இடங்களிலும் (உலசெல்லாம்) பரவி அவனைச் சிறப்பிக்கின்றன. என உரை விளக்கம் செய்வர். முனைவர் ச. இலக்குவனார் ஒருவர்க்குத் படாத ஒருமை உள்ளத்தோடு அவர் கற்ற கல்வி மிகுதியும் உறுதி தருதலையுடையது எனக் கூறுவர்.

இம்மை பிறப்பிற் பிரியலன் என்றேனாக்
கண்ணிறை நீர் கொண்டனள். (1315)

என்னும் குறள் குறிப்பாக ஆனால் தெளிவுபட மறுபிறப்பை உணர்த்தும். ஆகவே, மறுபிறப்புத் தொடர்பின்றி அக்குறளுக்கு உரைவரைதல் தத்தம் கொள்கை முனைப்பு என்றே கருதத் தோன்றுகிறது. அவை இயல்புரை ஆகா. 'கொலை விளையராகிய மாக்கள் (329) என்ற குறளுக்குப் பரிமேழகர் 'கொலை வினையர். என்றதனால் வேள்விக்கட் கொலையன்மை யிற்க என்று எழுதியதும் கொள்கை முறைப்பினாலேயாம்.

இலக்கணங் கருதாமை

கோளிற் பொதியிற் குணமிலவே என்குளத்தான்
தாளை வணங்காத தலை (9)

இக்குறளில் வரும் 'தலை' யைச் சினைப் பெயராகக் கொள்ளாது இடப் பெயராகக் கொண்டு வணங்காத இடத்து எனப் பொருள் கண்டுள்ளனர். அப்பொருளுக்குக் குறள் முடிவு ஏற்றதாக இல்லை.

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறப்பழிப்ப தில்லாயின் நன்று (49)

'அஃதும்' என்பதற்குத் துறவறமும் என்று பொருள் கொள்வதும் 'பிறன் பழிப்பதில்லாயின் நன்று'' என்பதற்கு மற்றவனாகிய துறவறத்தானைப் பழிக்காவிட்டால் நல்லது என்னும் பொருள் கோடல் இலக்கண நெறிக்குப் புறம்பாகும். பிறனைப் பழிப்பதில்லாயின் என்று பொருள் கொள்ளப் 'பிறற்பழிப்பதில்லாயின்' என்று பாடமிருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று (157)

'நோநொந்து' என்பதற்குப் பிறன் செய்த துன்பத்தை மனத்தில் வைத்து நொந்து கொண்டேயிருந்து எனக் கூறும் நாமக்கல் கவிஞர் உரை இயல்புரையாகும். அதற்குப் பரிமேலழகர் தமக்கு செய்த துன்பத்தால் பிறர்க்கு நேரும் துன்பத்திற்கும் வருந்தி என உரைப்பது இலக்கியங்கண்டு கூறும் நயவுரையாகும். அவ்வுரை 'எரிவாய் நிரயத்து வீழ்வர் சொல் என்று பரிவதூஉம் சான்றோர் கடன் (58) என்னும் நாலடியார்ப் பாடல் கண்டு கூறியதாகும்.

இலன் - என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலன் உடையான் கண்ணே உள. (223)

இக்குறளுக்குப் பரிமேலழகர், 'யான்வறியன் என்று இரப்பான் சொல்லும் இளிவரவைத் தான் பிறர்கண் சொல்லாமையும் அதனைத் தன்கண் சொன்னார்க்கு மாற்றாது ஈதலும் இவையிரண்டும் உளவாவன குடிப்பிறந்தான் கண்ணே' எனப் பொருள் கூறுவர். அவரே இக்குறளுக்கு. ' அவ்விளிவரவை ஒருவன் தனக்குச் சொல்வதற்கு முன்னே அவன் குறிப்பறிந்து கொடுத்தல் எனவும். அதனைப் பின்னும் பிறன் ஒருவன் பாற் சென்று அவன் அரையா வகையாற் கொடுத்தல் எனவும், யான்' இது பொழுது பொருளுடையேன் அல்லேன் எனக் கரப்பார் சொல்லும். இளிவரவைச் சொல்லாது கொடுத்தல் எனவும் வேறு மூன்று உரைகளைக் காட்டுவர். முதல் இரு உரைகள் முறையே காளிங்கர், பரிதி என்பவர்களுடையன. காளிங்கர் உரை ''முன்னம் முகத்தின் உணர்ந்து அவர். இன்மை தீர்த்தல் வன்மையானே' (3) என்னும் புறநானூற்றுப் பாடலைத் தழுவியது. பரிதி உரை 'நிற்பாடிய அலங்கு செந்நாப் பிறரிசை நுவலாமைஇ ஓம்பாதீயும் ஆற்றல் எங்கோ' (22) என்னும் புறப்பாடலை தழுவியது.

இக்குறளில் வரும் 'உள' எனும் பன்மை கண்டு பரிமேலழகர் 'உரையாமை ஈதல்' என்பதை உம்மை தொக்கதாகக் கொண்டு உரையாமையும் ஈதலும் என உரை எழுதியுள்ளார். அவர் உரைக்கு 'உரையாமை' எதிர்மறைத் தொழிற் பெயர். ஆனால் மனக்குடவர், வ.உ. சிதம்பரனார் முதலிய வேறு சிலர், 'உரையாமை என்பதைத் தொழிற்பெயராகக் கொள்ளாமல், வினையெச்சமாகக் கொண்டு 'உரையாமல்' எனப் பொருள் கண்டனர். அங்ஙனம் கண்டால். 'ஈதல்' என்னும் எழுவாய்க்கு 'உள்' என்னும் பன்மை வினைமுடிபாகும். அதற்கும் பரிமேலழகரே 'ஈதல் என்பதனைப் பொருட் பன்மை பற்றி வந்த பன்மையாக உரைப்பர். என்று பிற உரையாசிரியர்கள் கொண்ட உரைக்கு இலக்கண அமைதி காட்டுவர். வ.உ.சியும் 'ஈதல்' பல திறத்தனவாதலின், அது பன்மைப் பொருளிற் கூறப்பெற்றது எனத் தான் கொண்ட குறள். முடிவுக்கு தெளிவு காட்டுவர்.

இக்குறள் நடையை ஒத்த வேறு சில குறள்களை நோக்கின் மேற்கண்ட குறளின் பொருளைத் தெளிவாக அறியலாம்.

பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள. (521)

ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள். (1099)

என்னும் குறள்களில் 'பாராட்டுதல்', 'நோக்குதல்' என்னும் தொழிற்பெயர்களே 'உள' என்னும் பன்மை முடிவை ஏற்கின்றன. ஆகவே' எவ்வம் உரையாமை என்றவிடத்து உரையாமையை 'மை' ஈற்று வினை எச்சமாகவே கொண்டு பொருள் கூறலாம். ''கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் (701) என்றவிடத்துக் 'கூறாமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறாமைல் என மையீற்று வினையெச்சமாக விடுதல் ஒப்பு நோக்கத்தகும். பரிமேலழகர் கொண்டு போல. 'உள' என்னும் பன்மை முடிவுக்காக உரையாமையும் ஈதலும் எனக்கொண்டு உரையாமையைத் தொழிற் பெயராகக் கொள்ள வேண்டியதில்லை. 'பழமை பாராட்டுதல்' (521) என்பதற்கு பழைமையை எடுத்துக் கொண்டாடும் இயல்புகள் எனவும் பொது நோக்கு நோக்குதல் (1099) என்பதற்கு விளக்கமாக நோக்குதல் தொழில் ஒன்றேயாயினும். இருவர் கண்ணும் நிகழ்தலானும் ஒருவர்கண் தானும் குறிப்பு வேறுபாட்டாற் பலவாம் ஆலானும் 'உள' எனப் பன்மையாற் கூறப்பட்டது எனவும் பரிமேலழகர் எழுதியுள்ளார். குறள்களில் போக்கையும் இவ் விளக்கங்களையும் நோக்கின் ஈதலைப் பன்மையுணர்த்தும் தொழிற்பெயராகக் கோடலே குறட் போக்கிற்கு இயைந்ததாகும். உரையாமை எதிர்மறைத் தொழிற்பெயரன்று: அதிர்மறை வினையெச்சமாகும். ஆகவே இக்குறளுக்கு இரப்பவர்க்கு யானும் வறியவன் என்னும் துன்பத்தைக் கூறாமல் பலவகையில் ஈதல் நற்குடிப் பிறந்தானிடத்தே உளவாகும் எனப்பொருள் காண்பதே இயல்பாகும்.

உடையார்முன் இல்லார்போல் எக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர் (395)

இதற்குப் பரிமேலழகர் 'பிற்றைநிலை முகியாறது கற்றல் நன்று ஆதலின் செல்வர் முன் நல்கூர்ந்தார் நிற்குமாறு போலத் தாமும் ஆசிரியர் முன் எக்கூற்று நின்றும் கற்றார் தலையாயினார். அந்நிலைக்கு நாணிக் கல்லாதவர் எஞ்ஞான்றும் இழிந்தாரேயாவர் என்று பொருள் கூறுவர் இப்பொருளுக்குக் கடையருக்கு மறுதலைச் சொல்லான 'தலையாயிற' என்னும் சொல் வருவித்துரைக்கப்படுகிறது. இக்குறளுக்கு வேறொரு சொல்லை வருவிக்காமல் கொண்டு கூட்டிப் பொருள் கூறச் சிலர் முற்படுகின்றனர். ஏக்கற்றும் கற்றார் கடையர் கல்லாதவர் என்பதற்குக் கற்றார் இடத்தராவர் கல்லாதார் எனப்பொருள் மனக்குடவர். கடையர் என்பதில் 'கடை' என்பதற்கு இடப்பொருள் கொண்டு, கடையர்-இடத்தவராவர் என்று கூறும் அவர் உரை குறள் நடைக்கு ஏற்றதாகப்படவில்லை. கல்லாதவரிற் கடையென்ப (779) என்பதுபோலக் கடை- இழிந்தது எனக்கொண்டு கடையர் இழிந்தவர் என்ப பொருள் கூறுவதே இயைபாகும். 'இல்லார் என்பது வறியவரையே குறிக்கும் 'இல்லாரை எல்லாரும் எள்ளும் (752) என்னும் ஆட்சி காண்க. அதுபோல உடையார் எனின் செல்வரையே குறிக்கும். ஆகவே, 'உடையார்முன் இல்லார் என்பதற்குச் செல்வர் முன் வறியவர் என்பதே பொருத்தமாகும். உடையார் என்பதற்குச் சிலர் கூறும் அறிவுரையார் என்ற பொருளும் இங்குச் சிறப்பில்லை.

உடையார் என்பதைப் பயனிலையாகவும் கற்றார் என்பதை எழுவாயாகவும் கொண்டு உடையார் கற்றார் எனக் கூறுவர். ச.கோ. பாரதியார் எல்லாம் உடையவர்கள் கற்றவர்கள் என்பது கருத்து. சிறப்பு நோக்கிப் பயனிலை முன்கூறப்பட்டது என்பர். அங்ஙனம் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளின் செல்வர் முன் வறியர் என்னும் இயல்பான பொருள் கிடைக்கவில்லை. முன் இல்லார் என்பதில் உள்ள முன் பொருளிழக்கும்.

உடையார் முன் இல்லார் போல் கற்றார் முன் எக்கற்றுங் கல்லாதவர் கடையரே என்று மு. அருணாசலம் பிள்ளை கொண்டு கட்டுதல் ஏற்புடையது. போல் தோன்றினாலும் முன்' என்னும் சொல் வருணித்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பொருள் கல்லாதவரின் இழிவு கட்டுதலின் கல்லாமை என்னும் அதிகாரத்துக் இயையுமே யன்றிக் கல்விச் சிறப்புக்கூறும் இவ்வதிகாரத்துக்கு இயையுடைத்தா என்ற எண்ணம் எழுகிறது. கல்வி அதிகாரத்தில் கல்விச் சிறப்பும் கற்றார் சிறப்பும் கூறப் பெறும். கற்றோர் சிறப்புடன் கல்லாதார் இழியும் 'கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர் (393) என்பது போல இயைபுபற்றி இரண்டும் சேர்த்துக் கூறப்பெறும். ஆனால் கல்வியதிகாரத்தில் கல்லாமையின் இழிவு மட்டுமோ, கல்லாமை அதிகாரத்தில் கல்விச் சிறப்பு மட்டுமோ குறிக்கப்படவில்லை என்பது உளங்கொளத்தக்கது. ஆகவே அருணாசலப்பிள்ளையின் பொருளும் ஏற்புடையதன்று.

இக்குறள்நடை பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார் (10) என்னும் குறள் நடை ஒப்பது. இக்குறளில் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் யார் எனக் குறிக்கப்பெறவில்லை. அடி சேர்ந்தார் நீந்துவர் என்பது கருத்தாகலின் சேர்ந்தார் என ஒருசொல் வருவித்துரைக்க வேண்டும். அதுபோல் கல்லாதவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையர் கற்றார் எத்தகையர் எனக் குறளில் குறிக்கப்பெறவில்லை. கற்றார் தலையாயர் என்பதுணர்ந்து கடையர் என்பதன் மறுதலைச் சொல்லாய தலையாயர் என்ற சொல்லை வருவித்துரைக்க வேண்டும். ஒரு சொல்லை வருவித்து முடித்தல் குறள் நடையாகக் காணப்படுதலின் அங்ஙனம் வருவித்துரைத்த பரிமேலழகர் உரையே குறளுக்குப் பொருத்தமானது சொல்லை வருவியாது உள்ளது கொண்டே உரைக்கவேண்டும் என்ற வரையறையே. வேறுசில உரைகள் எழக் காரணமாயின. குறள் நடை ஒப்புமை, சில குறளின் பொருளை உறுதி செய்யத் துணை செய்கின்றது என்பதனை மேலே காட்டிய குறட் சான்றுகளால் துணியலாம்.

குறளின் இயல்பான உரையை அறிய விரும்பினால் குறள் மூலத்தைப் பன்முறை ஓதி உரைவேண்டும். இது குறளின் அடிப்படை நெறிகளை உயரிய கொள்கைகளை அறிய உதவும். சொற்களைப் பிரிக்கும் போது குறளின் பொருட்சிறப்பிற்கேற்கப் பிரிக்கவேண்டும். மூலபாடங்கள் பலவற்றைக் கண்டு நல்லதைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பொருட் பொருத்தமுறச் சொற்களைக் கொண்டு கூட்டிக் குறளுக்கு உரை காணவேண்டும். குறளெழுத்து காலம் பற்றிய கருத்துடன் சொற்பொருள் காண்டல் ஏற்புடையது. அக்கால மக்களின் நம்பிக்கை, கொள்கை. மரபு, முதலியவற்றை அறிதலும் இன்றியமையாததாம். இலக்கண மரபினைப் புறக்கணிக்காமல் வரம்பிற்குட்பட்டு உரைசெய்தல் நேரிது. தம் கொள்கைகளை முனைப்புடன் திணித்துக் குறளுரை செய்தல் கூடாது. நடை ஒப்புமை உள்ள குறள்களை ஒப்புநோக்கிப் பொருள் காணப்படுகின் ஐயம் நீங்கித் தெளிவுண்டாகும். இஃதொரு சிறந்த உரைநெறி.

உரையாளர் எல்லாரும் ஒவ்வோர் வகையில்
புரைதீர் விளக்கம் புகல்ப - வரையாது
வள்ளுவம் காண வழியா தெனவினவின்
உள்ளமே மூலநூல் ஓது.


JAFFNA TAILORS
&
TEXTILES

WE SELL READY MADE CLOTHING

Specializes in....
Gents Suits
Pants
Blazers
and
any Kind of Altrations

தொடர்புகளுக்கு
Raj
Luella Plaza
272 Markham Road
Scarborough, Ont M1J 3C5
(Markham / Eglinton)

Tel.:-(416) 269-6064




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகானா வீடியோ
## கொம்பிளக்ஸ்

வீடியோ உலகில் ஓர் மைல் கல்

அனுபவம், தரம், திறமை, கற்பனை வளத்துடன், நவீன தொழில் நுட்பத்தில் டிஜிற்றல் 3CCD, கை 8 (High 8), கமராக்கள் உதவியுடன்,

**TOASTER, COMPUTER, 3D ANIMATION**

இவைகளுடன், தரம் குறைவில்லாத தன்மையுடன் உங்கள் மங்கள கரமான நிகழ்வுகளை காலம் காலமாக கண்டு மகிழ்ந்திட

அழையுங்கள்

**A. Rangarajan (Ragu)**

**Sagana video Complex**

**Tel: (416) 282-5376**

*தரம் பேணுவதே எமது இலக்கு*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ASIAN TEXTILE & GIFT SHOP




காஞ்சிபுரம், மணிப்புரி,
பனாரஸ் மைசூர் சில்க்,
நூல்சேலை, சுரிதார்,
பட்டுவேட்டி, ஆண், பெண்,
சிறுவர்களுக்கான ஆடைகள்,
ஆபரண அலங்காரப் பொருட்கள்.
மற்றும் எவர்சில்வர் பரிசுப் பொருட்கள்,
பான்சி பொருட்கள், சிறுவர்களுக்கான
விளையாட்டுப் பொருட்கள் உங்கள்
வசதிக்காக எங்கள் ஸ்தாபனம்
விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்பதனை
மிகவும் மகிழ்ச்சியுடன்
அறியத் தருகின்றோம்।

Wedding Sarees,
Garments,
Textiles Gift Items,
Fancy Goods
& Experienced Saree Blouse

## ஏசியன் ரெக்ஸ்ரைல் அன் கிவ்ற் சொப்

**3601 Lawrence Ave., Unit-23**
**Scarborough, Ontario**
**(Markham & Lawrence)**
**Tel: (416) 438-6568**
**Fax: (416) 438-6568**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் - கனடா

## செயற்குழு உறுப்பினர்கள்

**காப்பாளர்:**

கவிஞர் வி. கந்தவனம்

**தலைவர்:**

திரு. சீ. செல்லையா

**உப தலைவர்:**

திரு. ச. சபா நடேசன்

**இணைச் செயலாளர்கள்:**

திரு. ஆர். ஆர். ராஜ்குமார்

திரு. சீ. பாலசுப்பிரமணியம்

**உதவிச் செயலாளர்:**

திரு. சீவா. கணபதிப்பிள்ளை

**பொருளாளர்:**

திரு. க. விக்னேஸ்வரன்

**உதவிப் பொருளாளர்:**

திரு. சீ . சிவசோதி

திரு. அ. சௌந்தரராஜன்
திரு. அ. அருந்தவராஜா
திரு. ம. யேசுதாசன்
திரு. ஜீவன் பொன்னம்பலம்
திரு. இ. நந்தி
திரு. இரா. செந்தில்குமரன்
திரு. வே. சிவராஜா
திரு. எஸ். பத்மநாதன்
திரு. அ. துரைராஜா
திரு. செல்வா செல்லையா
திரு. ந. நந்தகுமார்
திரு. சு. மோகன்
திரு. ஆ. வேலுப்பிள்ளை
திரு. எம். எஸ். அலெக்சாண்டர்

நன்றிகள்
நேசா கிறாபிக் திரு. சீ. விஜயரட்ணம்
அட்டை வடிவமைப்பு திரு. விஜய் ஆனந்த் - பரடைஸ் அச்சகத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவன் வாய் மொழி

மெள்ளத் தடவியுடல் மேலோட்டாய்ப் பார்த்து விட்டுக்
கள்ளக் களிறு தன்னைக் கண்ணற்றோர் கண்டது போல்
வள்ளுவன் வாய் மொழியை வகை வகையா யாந்து விட்டு
எல்லா முணர்ந்தது போல் ஏதேதோ கூறுகின்றோம்.

தெள்ளு தமிழ்க் கவிஞன் தேன்பாகாம் திருக்குறளை
உள்ளத்துக் குணர்வளிக்கும் உயிர்த் துடிப்பாம் திருக்குறளை
சொல்லுக்குச் சொல்லர்த்தம் சுவை குன்றாத் திருக்குறளை
உள்நோக்கிப் புறம் நோக்கி உலகில் நான் எதற்கொப்பேன்

எள்ளென்று கூறிடலாம் எண்ணிக்கைக் கது வொக்கும்
குள்ளக் கவியதனாற் குறுமைக்கு மது பொருந்தும்
கள்ளென்று கூறிடலாம் கவிச்சுவையா லது மயக்கும்
முள்ளென்று கூறிடலாம் முரணோரை யது குத்தும்.

வில் என்று கூறிடலாம் வீணரைத்தான் தீண்டுதலால்
கல்லென்று கூறிடலாம் கற்பவக்கோர் அடியதனால்
இல்லென்று பகர்ந்திடலாம் இளங் கவிஞர்க் கடைக்கலத்தால்
எல்லாமே யடக்குவதால் எதற்குத்தா னொப்பிடலாம்?

பல்லாண்டு போனாலும் பலவம்ச மழிந்துலகில்
கல்லான கட்டிடங்கள் கலைந்துலைந்து போனபின்னும்
சொல்லாலும் சுவையாலும் சுடர் நின்ற கருத்தாலும்
வள்ளுவனின் வாய் மொழியோ வளம் கொண்டு வாழ்கிறதே.

வைத்திய கலாநிதி விக்டர் ஜோ. பிகுராடோ

---

மத்தாப்பு நவம்பர் 5, 1998

நன்றி மறப்பது நன்றன்று!

மத்தாப்பு 97க்கு பிறகு மத்தாப்பு 98 சிறப்பித்த தமிழ் ஆர்வலர்கள், பொது மக்களுக்கு, கலைஞர்கள், பேராளர்கள் அனைவருக்கும்
பிரதம விருந்தினராக வருகை தந்த டாக்டர். ஜோ. பிகுராடோ . அவர்கட்கும்.
விடிவெள்ளி ஒளி 4க்கு விளம்பரம் தந்துதவிய அனைத்து நிறுவனங்களுக்கு, கட்டுரை கவிதை ஆகியவற்றை தந்துதவிய அனைவருக்கும்.
அவ்வவ்போது பத்திரிகை வானொலி தொலைக்காட்சி மூலம் விளம்பரம் செய்த நிறுவனத்தின் அதிபர்கள் பத்திரிகை ஆசிரியர்கள் அவர்கட்கும்
மத்தாப்பு 98 சிறப்பாக நடைபெற நன்கொடை கொடுத்த பிரமுகர்கள், வர்த்தகர்கள் அனைவருக்கும்
மத்தாப்பு 98 சிறப்பாக நடைபெற ஆக்கமும் ஊக்கமும் தந்துதவிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.
உ.த.ப.இயக்கம் கனடா கிளை சார்பாக மனமார்ந்த நன்றியை மிக்க பணிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம் அன் சன்ஸ்

# SAMY & SONS

WHOLE SALERS & RETAILERS



புத்தம் புதிய டிசைன்களில் வெளியூர்களில்
இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவநாகரீக
மங்கையர், ஆடவர், சிறுவர், சிறுமியருக்குரிய
சகலவிதமான உடுப்பு வகைகளையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

இலங்கை, இந்தியா, சிங்கப்பூர் மற்றும்
ஐரோப்பிய நாடுகளுக்கான துரித பணமாற்றுச்
சேவை.

தரமான CD மற்றும் ஓடியோ, வீடியோ
கசற்றுக்களை விற்பனைக்கும் வாடகைக்கும்
பெற்றுக் கொள்ளலாம்.


கதிரைகள், தலைப்பாகை, சோடனை
நகைகள் வாடகைக்கு எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம்.

**Textiles, Jewellery,
Craft Items,
Gift Items,
Money Transfer,
Audio, Video, CD
Sales & Rentals**

**1884 B KENNEDY ROAD
SCARBOROUGH**

**TEL.: (416) 298-1598
FAX: (416) 298-2849**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Banquet facilities up to 700 Persons
50 பேர் தொடக்கம் 700 பேர் வரையில்
கொள்ளக்கூடிய அலங்கரிக்கப்பட்ட அழகான
மூன்று மண்டபங்கள் ஒரே இடத்தில் அமைந்துள்ளன.
திருமணம்
பிறந்தநாள்
பூப்புனித
நீராட்டு விழா
மற்றும்
சகல
வைபவங்களுக்கும்
தொடர்புகளுக்கு:
Jey or Sasi
Tel:
(416) 265-3333
(416) 266-3841
Eastown
Restaurant & Banquet Halls
2648 Eglinton Av. E.,
Scarborough, ON (at Brimley)